குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்
**முன்னிலை** : திரு.R.கைலாஷ், பி.ஏ., பி.எல்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், சீர்காழி.
2026 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் நாள் திங்கள்கிழமை
**CRLMP.No.291/2026**
**CNR.No.TNMY08-000944-2026**

சுதாகர் 41/2026
த/பெ.சீனிவாசன் ................ மனுதாரர்/எதிரி

/எதிராக/

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையம்,
Cr.No.96/2026
U/s. 118(1), 296(b), 351(3) BNS
.................எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு என் முன்பாக இன்று 16.03.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி வழக்கறிஞர் நிலை-II திருமதி. K. நிவேதா அவர்கள் ஆஜராகியும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

i)மனுதாரர்/எதிரி தரப்பில், BNSS சட்ட பிரிவு 480ன் கீழ் **முதல் பிணை மனு** தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி மீது ஆணைக்காரன் சத்திரம் காவல் துறையினர் 07.03.2026 அன்று U/s. 118(1), 296(b), 351(3) BNS -ன் கீழ் வழக்கு பதிவு செய்து, எதிரி 07.03.2026ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மனுதாரர்/எதிரி மேற்படி குற்றத்தை செய்யவில்லை என்றும், இவ்வழக்கு பொய்யானது என்றும், எதிரி மீது இவ்வழக்கு தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/எதிரி குற்றத்தன்மை இல்லாத அப்பாவியான நபர் என்றும், மேற்படி எதிரியை பிணையில் விட்டால் எதிரி தலைமறைவாகமாட்டார் என்றும், மனுதாரர் தகுந்த பிணையதாரர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த தயாராக உள்ளதாகவும், எனவே, மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க வேண்டுமென்றும், அவ்வாறு பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் நீதிமன்றம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக மனுதாரர்/எதிரி தரப்பில் வாதிடப்பட்டது.

ii) எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில், ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலைய குற்ற எண்.96/2026, U/s. 118(1), 296(b), 351(3) BNS ன்படி வழக்கின் தொடர்புடைய எதிரியை தங்களது நீதிமன்றத்தில் ஆஜர் செய்து 15 நாட்கள் அடைப்பு காவலில் சீர்காழி கிளை சிறையில் இருந்து வருகிறார். இவரது தொடர்புடைய வழக்கானது புலன் விசாரணையில் உள்ளது. மேலும் எதிரியை பிணையில் விட்டால் சாட்சியை கலைக்கக்கூடும் என்பதால் எதிரியை பிணையில் விட கடுமையாக ஆட்சேபனை தெரிவித்தும், எதிரிக்கு பிணை கொடுத்தால்

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.16 17:35:22 +0530

இதுபோன்ற குற்றச்செயலில் மீண்டும் ஈடுபடவும், தலைமறைவாகவும் வாய்ப்புள்ளது என்றும், எதிரி சாட்சிகளை மிரட்டி கலைக்கக்கூடும் என்பதால், பாதிக்கப்பட்டவர் மருத்துவமனையில் இருந்து டிஸ்ச்சார்ச் ஆகிவிட்டார் என்றும், மேற்படி எதிரிக்கு பிணையம் வழங்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டும், உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II தெரிவித்துள்ளார்.

iii)இருதரப்பு வாதங்களும் ஆவணங்களும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/எதிரி மீது 07.03.2026 அன்று U/s. 118(1), 296(b), 351(3) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்து, எதிரி 07.03.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. இந்த வழக்கானது, கடந்த 06.03.2026ம் தேதி புகார்தாரரின் சகோதரியின் கணவரும் எதிரியுமான சுதாகர் சீதனமாக பெற்ற இருசக்கர வாகனம் தொடர்பாக அவர்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டு எதிரி மற்றும் அவரது மூன்று நண்பர்கள் சேர்ந்து புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டி, கத்தியால் குத்தி, அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தது சம்பந்தப்பட்ட வழக்காகும். இந்த நிலையில், எதிரிகள் சிறையில் இருந்த நாட்களை கருத்தில் கொண்டும், கண்ணுற்ற சாட்சிகளிடம் இருந்து வாக்குமூலம் பெறப்பட்டு விட்டதை கருத்தில் கொண்டும், புகார்தாரர் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடித்து வீடுதிரும்பிவிட்டதை கருத்தில் கொண்டும், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் வழக்கு விசாரணைக்கு முறையாக ஆஜர் ஆவார், சாட்சிகளை கலைக்கமாட்டார், வழக்கு விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பார் என்று எதிரி தரப்பில் கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் நீதியின்பால் **இந்த பிணை மனுவை அனுமதித்து** எதிரிக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) எதிரி இவ்வழக்கில் முறையாக ஆஜராவதை உறுதிப்படுத்தும் விதமாக மனுதாரர்/எதிரி மற்றும் இரண்டு பிணையதாரர்கள் தலா ரூபாய் 25,000/– மதிப்புள்ள பிணை பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

2) எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு ஆஜராகி வரும் 01.04.2026 தேதி வரை எதிரி கையொப்பம் செய்ய வேண்டும்.

3) நீதிமன்றம் மற்றும் காவல் துறையினரின் வழக்கு விசாரணையில் தவறாமல் ஆஜராக வேண்டும்.

4) மனுதாரர் சாட்சிகளை மிரட்டவோ, ஆதாரங்களை அழிக்கவோ முற்படக்கூடாது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.16 17:35:33 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**சீர்காழி**